வாசிக்க: யாக்கோபு 3:1-13

***"தன்னைத் தேவபக்தியுள்ளவன் என்று எண்ணிக்கொண்டிருப்பவன் தனது நாவை அடக்காமலிருந்தால் அவன் தன்னையே ஏமாற்றிக்கொள்ளுகிறான்; அவனது தேவ பக்தி வீண்" (யாக் 1:26)***

புதிய ஏற்பாட்டு வெளிச்சத்தில் பூரணம் அல்லது நிறைவு என்பது வளர்ச்சி யையும் முதிர்ச்சியையும் குறிக்கும். பூரணத்துடன் அடையாளப்படுத்தப்பட்ட முக்கியமானதொரு குணம் நாவடக்கம். இதோ திருமறையின் கூற்று: "ஒருவன் சொல் தவறாதவனானால் அவன் நிறைவான மனிதனாயும், தனது உடல் முழுவதையும் கடிவாளத்தினால் அடக்கிக்கொள்ளக்கூடியவனுமாய் இருக்கிறான்" (யாக் 3:2).

நடைமுறைப் பரிசுத்த வாழ்வை விளக்கும் புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களில் யாக்கோபு நிருபம் முக்கியமானது. நாவைக்குறித்து இங்கு அதிகம் எழுதப் பட்டுள்ளது. நாவடக்கமில்லையேல் தேவபக்தி வீண் என்கிறார் யாக்கோபு. "மனிதன் பேசும் எல்லா வீணான வார்த்தைகள் குறித்து தீர்ப்புநாளில் கணக்குக் கொடுக்கவேண்டும். உங்கள் வார்த்தைகளைக் கொண்டே நீங்கள் குற்றமற்றவர் களாகக் கருதப்படுவீர்கள்; உங்கள் வார்த்தைகளைக்கொண்டே குற்றவாளிகளாக வும் கருதப்படுவீர்கள்" என்ற வசனங்கள் நம் பேச்சுக்கள் எவ்வளவு முக்கிய மானவை என உணர்த்துகிறதன்றோ? (மத் 12:36,37).

இயேசு உண்மையையே பேசினார் (மாற் 12:32); அருள் மொழிகளையே பேசி னார் (லூக் 4:22); குற்றமற்ற வார்த்தைகளையே பேசினார் (லூக் 20:26). இயேசுவின் பழுதற்ற பண்பை விளக்கும்போது பேதுரு இப்படி எழுதினான்: "அவரது வாயில் வஞ்சனை காணப்படவில்லை" (1 பேது 2:22).

வளர்ச்சி தரா பேச்சைத் தவிர்த்து, சரியானதைப் பேச ஏறத்தாழ எல்லா திருக்கடிதங்களுமே வலியுறுத்துகின்றன. நாவை அடக்குவது எளிதல்ல (யாக் 3:8). அதைத் தூயாவியானவர் ஆட்கொள்ளவேண்டும். நாவின் பாவங்களை அறிக்கை யிட்டு பலிபீடத்தில் நாவை அர்ப்பணித்தால் உன்னதத்தின் அக்கினி நம்மைத் தூய்மைப்படுத்தி, ஊழியத்திற்கு நம்மைப் பணித்து அனுப்பும் (ஏசா 6:5-9). ஆதிச் சீடர்மீது இறங்கியபோது ஆவியானவர் பிரதானமாக அவர்கள் நாவைத் தொட்டார் (அப் 2:4). இதன் முக்கியத்துவத்தைக் கவனிக்கத் தவறக்கூடாது.

உடலின் பாகங்களிலெல்லாம் சாத்தானுக்கு நாவைப்போன்று பயனுள்ளது வேறொன்றுமில்லை என்றார் ஒரு பக்தன். சிம்சோனின் நாட்களில் கொல்லுவதற்காக கழுதையின் தாடை எலும்பு பயன்படுத்தப்பட்டது. இன்றும் அப்படியே! பட்டயக் குத்துகள்போல சிலர் பேசுகிறார்கள் (நீதி 12:18). நாவால் பெருமை பேசக்கூடாது (யாக் 3:5). புறங்கூறுதலும் நாவினால்தான் (நீதி 10:18). கோள்சொல்லுதல் (நீதி 18:8), கேலி செய்தல் (நீதி 19:29), வாக்குவாதம் (நீதி 18:6), கடுஞ்சொல் (நீதி 15:1), பொய் பேசுதல் (நீதி 19:5) போன்றவற்றிற்கு நம் நாவை விலக்கவேண்டும். முப்பத்திரண்டு வெள்ளையுடை வீரர்களும் சிவந்த நாக்கைத் தேவையில்லாது வெளியே வருவதைத் தடுக்கட்டும்!

*இனிய உளவாக இன்னாத கூறல்*
*கனியிருப்பக் காய் கவர்ந்தற்று (திருக்குறள்)*